Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 631/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | குப்புசாமி | வட்டம் | - | உளுந்தூர்பேட்டை |
| த/பெ. | | ஆறுமுகம் | சமயம் | - | |
| கிராமம் | - | மடப்பட்டு | வயது | - | 63 |

14.11.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது மடப்பட்டில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும்.** மேற்படி கையெழுத்தை சுமார் 1 வருடத்திற்கு முன்பு நானும், என்னுடன் செல்வம் என்பவரும் திருவெண்ணெய்நல்லூர் ரிஜிஸ்டர் ஆபிசுக்கு வந்தோம். அப்போது போலீசார் ஒரு கையெழுத்து போடசொல்லி கேட்டார்கள். போலீசார் வந்து விசாரித்தற்காக கையெழுத்து போடசொன்னார்கள். வேறு ஒன்னும் பிரச்சனை இல்லை என்று சொன்னார்கள். கையெழுத்து போட்டேன். போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 11.03.2024 ந் தேதி 07.00 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் போலீசார் சம்பவ நடந்த இடமான சித்தனாங்கூர் சுடுகாடு அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையில் மாதிரி வரைபடம் , பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்று போலீசார்

விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை

(Sd/-R.SenthilKumar)
D.M-cum-JM,
T.V.Nallur.